**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை 600 006**

ந. க. எண்.19850/சி5/இ2/2014 நாள் 01.10.2014

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 23.08.2010க்குப் பின்னர் பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமன ஆணை வழங்கியமை – ஆசிரியர் தகுதித் தேர்வு தேர்ச்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்குதல் குறித்து.

பார்வை 1) அரசாணை (நிலை) எண்.181, ப.க.துறை, நாள் 15.11.2011
2)) சென்னை–6, பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.112830/சி5/ இ2/2011 நாள் 19.12.2011
3) நேரடி நியமனத்திற்கான ஆசிரியர் தகுதித் தேர்வு சார்ந்து சென்னை–6, ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை 2012

***********

பார்வை (1)ல் காண் அரசாணைப்படி ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயமாக்கப்பட்ட பிறகு, பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்ட நிகழ்வுகளில் "நியமனம் பெற்ற 5 ஆண்டுகளுக்குள் கண்டிப்பாக ஆசிரியர் தகுதித் தேர்வு (Teacher Eligibility Test) தேர்ச்சி பெற வேண்டும்" என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

2010–11ம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பட்டதாரி (தமிழ்) ஆசிரியர்களாகத் தேர்வு செய்யப்பட்டு , பார்வை (2)ல் காண் செயல்முறைகள் வாயிலாக நியமன ஆணை வழங்கப்பட்டதிலும், "நியமனம் பெற்ற 5 ஆண்டுகளுக்குள் கண்டிப்பாக ஆசிரியர் தகுதித் தேர்வு (Teacher Eligibility Test) தேர்ச்சி பெற வேண்டும்" என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பார்வை (3)ல் காண் ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை 2012–ல் 23.08.2010க்கு முன்னர் சான்றிதழ் சரிபார்ப்புப் பணி முடிவுற்ற பணி நாடுநர்களுக்கு, 23.08.2010க்குப் பின்னர் பணி நியமனம் வழங்கப்பட்டு இருந்தாலும் அவர்கள் TET தேர்ச்சி பெற வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்ள நிலையில் 2011ம் ஆண்டில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமன ஆணை வழங்கப்பட்டவர்களில், 23.08.2010க்கு முன்னர் சான்றிதழ் சரிபார்ப்புப் பணி முடித்தவர்களுக்கு TET தேர்ச்சி பெற வேண்டிய அவசியமில்லை என்று அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் சார்பில் தகுதிகாண் பருவத்தினை முடித்து ஆணை வழங்குவதில் காலதாமதம் ஏதும் இன்றி செயல்படவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்) வி.சி.இராமேஸ்வரமுருகன்

**பள்ளிக்கல்வி இயக்குநர்**

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

www.kalvikural.com